DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

CC. / STC. / MC./ DVC. No : **CC. 219/2021**
Miscellaneous : -

Deposition of **PW - 1 Witness for recall**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மோகன் |
| Father's Name | : | திரு. பரமசிவம் |
| Village | : | ராயர்பாளையம் |
| Taluk | : | தலைவாசல் |
| Calling | : | டிரைவர் |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03.09.2024.

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. குறுக்கு விசாரணை**

துவக்க நேரம் 11.30

1) நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் எனது அப்பா எந்த திசையிலிருந்து சென்றார். எதிரி எந்த திசையிலிருந்து எந்த திசையில் சென்றார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது வீடு எங்கு உள்ளது என்றால் ராயர்பாளையம் காட்டுக்கொட்டாயில் ரோட்டு ஓரத்தில் உள்ளது.

2) சம்பவம் நடந்த தேதி என்னவென்றால் கடந்த 03.09.2021 ஆகும். அன்று மாலை 07.45 மணிக்கு நான், எங்கு இருந்தேன் என்றால் எனது வீட்டில் இருந்தேன். இந்த விபத்து சம்மந்தமாக நான் வீரகனூர் காவல் நிலையத்தில் கைப்பட எழுதிய புகாரை கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரை நான் கைப்பட எழுதிக்கொடுத்தேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். நான் சொல்வதுபோல் போலீஸ் விசாரணையில் புகாரை கைப்பட எழுதியதாக சொல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக தற்பொழுது பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) எனது அப்பா எங்கு குடியிருந்தார் என்றால் எனது அக்கா செல்வி வீட்டில் குடியிருந்தார். செல்வியின் வீடு, ஆத்தூர் - வீரகனூர் சாலையில் ராயர் பாளையத்தில்

உள்ளது என்றால் சரிதான். ரோட்டு ஓரத்தில் அந்த வீடு உள்ளது. எனது உடன் பிறந்த சகோதரர் செல்வம் என்று யாரேனும் உள்ளரா என்றால் இல்லை. கண்ணுசாமிதான் எனது உடன்பிறந்த சகோதரர். செல்வி வீட்டிற்கு அருகில் உள்ளவர் பெயர்தான் செல்வம். அக்கா வீட்டிற்கு எந்தபுறம் உள்ள வீட்டில் உள்ளவர் செல்வம் என்றால் கிழக்கு திசையில் உள்ள வீட்டில் உள்ளார். நான் சொல்வதுபோல் செல்வி வீட்டின் கிழக்கால் செல்வம் வீடு இல்லை என்றால் இல்லை உள்ளது.

4) எனது அக்கா வீட்டின் மேற்கில் தென்வடலாக ஒரு சாலை செல்கிறது என்றால் சரிதான். அந்த ரோட்டிற்கு மேற்காக ராயர்பாளையம் ஏரி உள்ளது என்றால் மேற்கில் இல்லை. சாலையின் தென்புறத்தில்தான் உள்ளது. எனது அக்கா விட்டிற்கு வட மேற்கு மூலையில் முருகன் கோவில் உள்ளது என்றால் நேர் வடக்காக மலையில் முருகன் கோவில் உள்ளது. வடமேற்கு மூலலையில் மலையும், முருகன் கோவிலும் உள்ளது என்றால் உள்ளது.

5) ரோட்டின் வடபுறம் ஓரமாக மோகனசுந்தரம், குமார், மேரி, பச்சியம்மாள், பட்டாளத்தான், அமுதா, சண்முகம் ஆகியோர்களின் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். எனது தந்தைக்கு என்ன வயது என்றால் 70 வயது. அவருக்கு எந்த மருத்துவமனைக்கு சக்கரை, இதய நோய், சிறுநீரக நோய் உள்ளிட்டவற்றிக்கு எந்த மருத்தவமனையில் செல்வார் என்றால் எந்த நோயும் அவருக்கு இல்லை. உடல்நிலை சரியில்லை என்றால் அரசு மருத்துவமனைக்கு செல்வார்.

6) எனது தந்தை பேச்சு, மூச்சில்லாமல் கிடந்தார், வீரகனூர் மருத்துவமனையிலும், ஆத்தூர் மருத்தவமனையிலும் முடியாது என்று சொல்லிவிட்டார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன்.

7) எனது அப்பா மருத்துவமனையில் மயக்க நிலையில் இருந்ததால் அவரிடம் வாக்குமூலம் பெறமுடியாது என்ற காரணத்தினால் போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். சேலம் GH ல் வாங்கினார்கள். எனது அப்பா சேலம் மருத்துவமனையில் பேச முடியாமல் மயக்க நிலையில் இருந்ததால் இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று என்னிடம் சொல்ல முடியாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. ஆத்தூர் GH ல் இருந்தபொழுது எனது அப்பா என்னிடம் பேசினார்.

8) ஆத்தூர் மருத்துவமனையில் பேச முடியாத சூழ்நிலையில் எனது அப்பா இருந்ததால்தான் எனது அப்பாவை சேலம் மருத்தவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். போலீசார் எனது தந்தையிடம் ஆத்தூர் அரசு மருத்துவமனையில்

வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை.

9) எனது அப்பா வீரகனூர், ஆத்தூர் மருத்துவமனையில் பேச முடியாத நிலையில் இருந்தார் என்றாலும், இந்நிலையில் ஆத்தூர் மருத்துவமனையில் இருந்தபொழுது விபத்து குறித்து எனது அப்பா என்னிடம் சொன்னதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆத்தூர் மருத்துவமனையில் இருந்தபொழுது விபத்து குறித்து எனது அப்பா என்னிடம் சொன்னார்.

10) எனது அப்பா ஆத்தூர் மருத்துவமனையில் நல்ல நிலையில் இருந்திருந்தால் அவரிடம் போலீசார் வாக்குமூலம் பெற்றிருப்பார் என்றாலும், அவர் மயக்க நிலையில் இருந்ததால்தான் போலீசார் எனது தந்தையிடம் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. மதியத்திற்கு மேல்தான் எனது தந்தைக்கு பேச முடியாத நிலை ஏற்பட்டது. அதற்கு பிறகுதான் சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததார்கள்.

11) என்னிடம் சேலம் மருத்துவமனையில் எந்த தேதியில் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் கடந்த 04.09.2021 வந்து விசாரித்தார்கள். 05ம் தேதியும் வந்து விசாரித்தார்கள். இரண்டு நாட்களும் 05.00 மணிக்கு வந்து விசாரித்தார்கள். 04ம் தேதியே எனது அப்பா இறந்துவிட்டார். 05ம் தேதி உடலை எடுப்பதற்காக போலீசார் வந்தார்கள்.

12) வீரகனூர் போலீசார் நான் சொல்லும் 4,5 தேதிகளில் சேலம் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வந்தார்கள். விசாரித்தார்கள். புகாரில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தயார் செய்யப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது.

13) புகார் வாக்குமூலத்தில், சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை போல் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் கூடவே இருந்தேன். எனது அக்காவும் நேரில் பார்த்தேன். நான் சொல்வதுபோல் நான் உடன் இல்லை என்றாலும், எனது அக்காவும் நேரில் இந்த சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்த வீட்டிற்கு அருகில்தான் எனது அக்கா வீடு உள்ளது அவர் நேரில் பார்த்தார்.

14) 70 வயதான எனது அப்பா பார்வை குறைபாடு காரணமாக சாலையின் குறுக்காக தெற்கிலிருந்து வடக்காக திடீரென சாலைய தட்டு தடுமாறி கடந்தபொழுது, சாலை விதிகளை பின்பற்றி மெதுவாக மேற்கிலிருந்து கிழக்காக சாலையில் வந்த

எதிரியின் வாகனத்தின்மீது எனது தந்தையே மோதி இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

15) விபத்து ஏற்பட்டவுடன் எதிரி ஒரு வாடகை காரை அமர்த்தி அதில் எனது தந்தையை அமர்த்தி சென்று வீரகனூர் மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரியல்ல. நாங்கள்தான் வாடகை காரை அமர்த்தி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். வாடைகை காரை எதிரிதான் வரவழைத்தார் என்றாலும், அதற்காக வாடகை தொகையையும் எதிரிதான் கொடுத்தார் என்றாலும் இதனை மறைத்து வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

16) மறுநாள் எதிரி, அவரது குடும்பத்தாருடன் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து எனது தந்தையிடம் நலம் விசாரித்தார் என்றால் சரியல்ல. விபத்து இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளேன். எனது தந்தையின் இறப்பிற்கு விபத்து இழப்பீடு வழக்கு தாக்கல் செய்யவேண்டி நடக்காத ஒரு சம்பவத்தை திரித்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து இழப்பீட்டு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டவில்லை என்றாலும், இந்த விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 12.05

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy B.Sc.L.,
Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **CC. 219/2021** |
| Miscellaneous | : | - |

Deposition of **PW - 2 Witness for recall**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. செல்வி |
| Father's Name | : | க/பெ திரு. ராமன் |
| Village | : | ராயர்பாளையம் |
| Taluk | : | தலைவாசல் |
| Calling | : | இல்லத்தரசி |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03.09.2024.

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. குறுக்கு விசாரணை**

துவக்க நேரம் 12.06

1) கடந்த 03.09.2021 அன்று நான் வீட்டில் இருந்தேன் என்றும் அக்கம், பக்கம் இருந்தவர்கள் சத்தம் போடவே நான் வெளியில் வந்து பார்த்தேன் என்றும் நான் எனது முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) சாட்சி மோகன் எனது உடன் பிறந்த சகோதரர் என்றாலும் மற்றொரு சகோதரரும் உள்ளார் அவர் பெயர் கண்ணுசாமி என்றாலும் சரிதான். செல்வம் என்று எனக்கு சகோதரர் இல்லை என்றால் சரிதான். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர்.

3) சம்பவதன்று எனது அப்பா என் வீட்டிலிருந்தோ, செல்வம் என்வர் வீட்டு பக்கம் இருந்தோ வரவில்லை என்றால் வடக்கு திசையில்தான் எனது அப்பா வந்தார். செல்வம் வீட்டிலிருந்தபொழுது எனது அப்பா பாத்ரூம் செல்வதற்காக வெளியில் வந்தார் என்று சொல்வது தவறு அவர் மேற்கிலிருந்து கிழக்காத்தான் வந்தார். எனது தந்தை பாத்ரூம் செல்வதற்காக எனது தந்தை, செல்வம் வீட்டிலிருந்தபொழுது எனது அப்பா வெளியில் வந்தாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை.

4) ரோட்டிற்கு வடக்காக எங்களுக்கோ, எனது குடும்பத்தாருக்கோ சொத்தமாக

வீடு எதுவும் இல்லை என்றால் சரிதான். எங்களுக்கு ரோட்டின் வடக்கா வீடு எதுவும் இல்லாத நிலையில் மேற்கிலிருந்து, கிழக்காக மலை அடிவாரம் செல்வற்கு அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பாத்ரூம் செல்வதற்கு அங்குதான் செல்லவேண்டும். எனது வீட்டிற்கு மேற்புறமாக தென்வடலாக ஒரு ரோடு செல்கிறது அந்த பாதையை ஒட்டி மேற்குபுறமாக ராயர்பாளையம் ஏரி அமைந்துள்ளது என்றால் சரிதான்.

5) ரோட்டிற்கு வடக்காக முருகன் கோவில் மலையடிவாரம் சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஏரி அருகில் உள்ள நிலையில் 1 கிலோ மீட்டர் தூரம் சென்று மலையடிவாரத்தில் மலம் கழிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ஏரி 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

6) எனது தந்தைக்கு 70 வயது இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு 70 வயது அதனால் பார்வை குறைபாடு உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு எல்லாம் இல்லை. அவர் கண்ணாடி கூட அணிந்ததது இல்லை. எனது தந்தை எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான்.

7) நான் சொல்வதுபோல் மேற்கிலிருந்து கிழக்காக ரோட்டில் நடந்துக்கொண்டிருக்கும் பொழுது விபத்து ஏற்படவில்லை என்றாலும், எனது வீட்டிலிருந்து வயோதிகத்தின் காரணமாக ரோட்டை தெற்கிலிருந்து வடக்காக ரோட்டை திடீரென்று கடக்கும்பொழுது சாலையில் மெதுவாக ஓட்டிவந்த எதிரியின் வாகனத்தின் மீது விழுந்து அவராகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

8) நான் விபத்து சமயத்தில் நான் வீட்டிற்குள் இருந்ததாக முதல்விசாரணையில் சொன்ன நிலையில் எவ்வாறு விபத்து நடந்தது என்றாலும், எந்த திசையில் இருந்து எந்த திசையில் வாகனம் வந்தது என்று நேரடியாக வந்தது என்று எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. சத்தம் கேட்டுதான் வந்தேன். அடிப்பட்டிருந்தது நான் வந்து பார்த்துதான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

9) நான் இந்த வழக்கில் சொல்லியிருப்பதுபோல் இந்த விபத்து ஏற்ப்படவில்லை என்றாலும் விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக உண்மையாக விபத்து நடந்த விதத்தை திரித்து எதிரியின் மீது பொய்யாக புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

10) நான் சொல்வதுபோல் முன்னிலையில் உள்ள எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும் எனது அப்பாவின் கவனக்குறைவாலும், வயோதிக்கத்தாலும்தான் ரோட்டை திடீரென்று கடந்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

11) அரசு தரப்பு சாட்சி கண்ணுசாமி, பிரகாஷ், சிலம்பரசன், ரஞ்சித்குமார், கலியபெருமாள், ஆகியோர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கு வேண்டியவர்களையும், பழக்கமானவர்களையும் வைத்து மிக அதிகமாக விபத்து நிவாரணம் கோரவேண்டும் என்ற நோக்கத்திற்காக ஆஜர் எதிரியின் மீது பொய்யாக புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

12) இந்த வழக்கு சம்பவம் குறித்து ஒவ்வொருவராக முன்னுக்கு பின்முரணாக காவல் துறையில் வாக்குமூலம் கொடுத்து ஆஜர் எதிரியின் மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி வழக்கு நடந்த உண்மையான விதம் குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றாலும், எதிரிதான் வாடைகை கார் மூலம் விபத்தில் அடிப்பட்ட எனது தந்தையை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றாலும் சரியல்ல. எதிரி குற்றமற்றவர் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

13) இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு 07.45 மணிக்கு நடைபெற்றது என்றால் இல்லை. 06.30 மணி இருக்கும். நான் 06.30 மணிக்கு விபத்து நடந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் இல்லை. சொல்லியுள்ளேன். 06.00 மணிக்கு இருட்டிவிடும் என்றால் இருட்டாது வெளிச்சமாகத்தான் இருக்கும். எத்தனை மணிக்கு இருட்டும் என்றால் 07.00 மணிக்கு இருட்டும். 70 வயதான எனது அப்பா வயது முதிர்வின் காரணமாக விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 12.30

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy B.Sc.L.,
Judicial Magistrate No.1,
Attur.